https://t.me/padasalaiguides www.Padasalai.Net https://bit.ly/3ssipUm0 www.CBSEtips.in

11ஆம் வகுப்பு

# உடனடித்தேர்வு - ஜூன் - 2023

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. [14 × 1 = 14]

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (i) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   (ii) பவணந்தி முனிவர் - நன்னூல்
   (iii) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
   (iv) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
   அ) (i), (ii) ஆ) (i), (iv)
   இ) (ii), (iv) ஈ) (i), (iii)

2. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?
   அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ்
   இ) நடராசன் ஈ) புல்

3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை:
   (i) மதிப்புக் கூட்டுப் பொருட்கள்
   (ii) நேரடிப் பொருட்கள்
   அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மட்டும் சரி
   இ) இரண்டும் சரி ஈ) (i) தவறு (ii) சரி

4. “வான் பொய்த்தது” - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்........
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது
   ஈ) வானம் என்பது பொய்யானது

5. **கூற்று** : “கோடு” என்பது என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   **விளக்கம் :** கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு
   ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி
   ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

6. ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

7. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
   இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

8. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
   அ) மொழி பெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாஷி
   ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

9. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
   அ) வினை ஆ) பயன்
   இ) வடிவம் ஈ) உரு

10. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............ நினை.
    அ) முகக்குறிப்பை அறிந்தவரை
    ஆ) எண்ணியதை எண்ணியவரை
    இ) மறதியால் கெட்டவர்களை
    ஈ) சொல்லேர் உழவரை

11. ‘ழ’ என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப் பட்டது. ‘கவிதைக்கிரீடம்’ என்று போற்றப்படுவது:
    அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி
    ஆ) கவிதை நூல், திருச்சாழல்
    இ) நாளிதழ், நன்னகர் வெண்பா
    ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

12. ‘ஜனப்பிரளயம்’ என்னும் வடமொழிச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல்
    அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
    இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

13. பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே ......... என்று தமிழில் வழங்கப்படும்.
    அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
    ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
    இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
    ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

14. மனித இனத்தின் ஆதி அடையாளம் :
    அ) எழுத்து ஆ) பேச்சு
    இ) மொழி ஈ) பாட்டு

### பகுதி - II - பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. [3 × 2 = 6]

15. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது, எதனை எழுதிச் சென்றது?
17. காவடிச் சிந்து என்பது யாது?
18. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [2 × 2 = 4]

19. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராச மாணிக்கனாரின் கூற்று யாது ?
21. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?



enquiry@studybooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net

https://t.me/sagasaguides www.Padasalai.Net https://bit.ly/3sspUm0 www.CBSEtips.in



**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [7 ×2 = 14]

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) பூஞ்சோலை ஆ) வாயொலி
24. "எதிர்நீச்சல்" என்னும் மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.
25. என்னே! மதுரை மீனாட்சியம்மன் கோவில் சிற்பக்கலை. (செய்தித் தொடராக்குக).
26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) மலிந்த ஆ) ஆழ்க
27. உவமை, உருவகம் - வேறுபடுத்துக.
28. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
    அ) Migration ஆ) Organic Farming
29. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

**பகுதி - III - பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

31. 'திருமலை முருகன் பள்ளு' கூறும் வடகரை நாட்டின் வளம் குறித்து எழுதுக.
32. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
33. 'உயிர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. குறிப்பறிதல் - குறள் வழி விளக்குக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

35. 'மாடித்தோட்டம்' நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. தாமஸிகம் என்றால் என்ன?


**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** விடை தருக. [3 × 4 = 12]

39. அ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
    கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.
    **அல்லது**
    ஆ) சொற்பொருள் பின்வரும் நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் பாடலில் பயின்று வரும் எவையேனும் மூன்று நயங்களை எடுத்தெழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம் தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின்றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும். **– நாமக்கல் கவிஞர்**

41. கலைச் சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?
42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




43. தமிழாக்கம் தருக :
    1. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
    2. The Pen is mightier than the sword.
    3. Nobody can hurt me without my permission.
    4. Education is the most powerful weapon, which you can use to change the world.

**பகுதி - IV**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

44. அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.
    **அல்லது**
    ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.
45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
    **அல்லது**
    ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. **அல்லது**
    ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**பகுதி - V**

**குறிப்பு : அடிபிறழாமல்** எழுதுக. [4 + 2 = 6]

47. அ) 'ஏடு தொடக்கி வைத்து' எனத் தொடங்கும் - சு.வில்வரத்தினம் பாடல்.
    ஆ) 'நன்று' - என முடியும் குறள்

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/suraguides www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



## விடைகள்

### பகுதி - I

1. இ) (ii), (iv)
2. இ) நடராசன்
3. அ) (i) மட்டும் சரி
4. ஆ) மழை பெய்யவில்லை
5. ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
6. இ) ஊருக்கு உதவுவது
7. அ) நற்றிணை
8. ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
9. இ) வடிவம்
10. இ) மறதியால் கெட்டவர்களை
11. அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி
12. இ) மக்கள் வெள்ளம்
13. அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
14. இ) மொழி

### பகுதி - II - பிரிவு - 1

15. நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என நான்கும் மருத்துவத்தின் பிரிவுகளாகும்.
16. காற்றின் தீராத பக்கங்களில் சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.
17. (i) தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனலாம்.
(ii) முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப் பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து என்ற பா வடிவம் தோன்றியது.
18. **துறை விளக்கம் :** செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

### பிரிவு - 2

19. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார்.
20. (i) "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது.
(ii) தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ் நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்பது மா. இராசமாணிக்கனாரின் கூற்றாகும்.
21. (i) ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்.
(ii) சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது.
(iii) தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகை பகுதிச் சுவர்கள், அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் ஃப்ரெஸ்கோ ஓவியங்களைக் காணலாம்.

### பிரிவு - 3

22. (i) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22.
(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.
(iii) மெய்களில் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாக வரும்.
23. அ) **பூ + சோலை – பூஞ்சோலை**
**விதி :** பூப்பெயர் முன் இன மென்மையுந் தோன்றும். பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லின மெய் மிகுந்து புணர்வது மட்டுமின்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு.
ஆ) **வாயொலி – வாய் + ஒலி**
**விதி :** 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வாயொலி' எனப் புணர்ந்தது.
24. வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து **எதிர்நீச்சல்** போட்டு வெற்றி பெறவேண்டும்.
25. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை மிகவும் அழகு வாய்ந்தது.
26. அ) **மலிந்த – மலி + த் (ந்) + த் + அ**
மலி - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி
ஆ) **ஆழ்க – ஆழ் + க**
ஆழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி
27.

| உவமை | உருவகம் |
|---|---|
| ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை. | உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப் படும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒற்றுமைப் படுத்துவது உருவகம். |
| உவமை வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும். | உவமானமும் உவமேயமும் வேறானவை அல்ல - இரண்டும் ஒன்றே என்ற அடிப்படையில் தோன்றும். |
| போல, புரைய, ஒப்ப என வருவன உவம உருபுகளாகும். **எ.கா :** குயில் போல பாடினாள். | ஆகிய, என்ற என வரும் இரண்டும் உருவக உருபுகளாகும். **எ.கா:** முகத்தாமரை |

28. அ) புலம் பெயர்தல் ஆ) இயற்கை வேளாண்மை
29. **கழை** மேல் நடக்கும் **கலை**யில் சிறந்த பெண்ணின் முகம் **களை**யாக இருந்தது.
30. சான்றோர் மிகுந்**தப்** பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்ட**ச்** செய்தனர்.

### பகுதி - III - பிரிவு - 1

31. (i) வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும், வண்டின் இசைக்கேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.
(ii) தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும்.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/sciaiguides www.Padasalai.Net https://bit.ly/3ssipUm0 www.CBSEtips.in



(iii) மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும்.

(iv) இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

32. **உள்ளுறை உவமை :** கவிஞர் தான் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை **'உள்ளுறை உவமம்'** (உவமை) என்பர்.

**சான்று :**

ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல். **– அகம். 8**

**விளக்கம் :** தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையை விட்டுப் பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில் சுருண்டு படுத்திருந்த பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகம் பட்டு, பாம்பு வலியால் துடிக்கிறது. கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன. ஆனால் உள்ளே, உறைந்திருக்கும் செய்தி வேறு. இரவு நேரத்தில் காட்டைக் கடந்து வரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது. மேலும் இப்பாடலில் உள்ளுறை உவமத்துடன் இறைச்சிப் பொருளும் அமைந்துள்ளது.

**இறைச்சி :** உள்ளுறை போன்றே இறைச்சி என்பதும் அகப் பாடலில் வருகின்ற மற்றொரு உத்தி ஆகும். இதுவும் குறிப்புப் பொருளில்தான் வரும். இறைச்சி கருப்பொருளின் அடிப்படையில் தோன்றுவதாகும்.

**சான்று :**

நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழிஅவர் சென்ற ஆறே. **குறுந்தொகை–37**

**விளக்கம் :** தலைவன் விரைவில் வருவான் எனத்தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். தலைவன் செல்லும் வழியில் யானை தன் பெண் யானையின் பசியைப் போக்குவதற்காக 'யா' மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரச்சுவையைப் பருகச்செய்யும். இதுதான் பாடலின் கருத்து. ஆனால், இதில் சொல்லப்படாத குறிப்பு ஒன்றுள்ளது. தலைவன் இந்த அன்புக் காட்சியைப் பார்ப்பான்; உடனே திரும்பி வந்து தலைவியின் துன்பத்தைத் தீர்ப்பான் என்பது இதிலுள்ள குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். உரிப்பொருளின் புறத்தே நின்று அதன் கருத்தை மேலும் சிறப்பிக்கப் பயன்படுகிறது இறைச்சி. சொல்லாமல் சொல்வதில் தான் கவிதை இன்பம் சிறக்கிறது. தலைவனின் செயலைக் கண்டிப்பதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் வருத்தத்தை வெளிப்படுத்தவும் திருமணத்தை வலியுறுத்தவும் இறைச்சி உத்தி பயன்படுகிறது.

33. **இடம் :** பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய 'புரட்சிக் கவி' - காவியத்தில் இத்தொடர் இடம்பெற்றுள்ளது.

**பொருள் :** குற்றமில்லாத உயர்ந்த மொழியென தமிழை உங்கள் உயிரைவிட மேலானதாகக் கருதிப் போற்றுங்கள், மக்களே! என்று உதாரன் மக்களிடையே கேட்டுக் கொண்டான்.

**விளக்கம் :** உதாரன், அமுதவல்லி காதலை அறிந்த மன்னன் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தான். கொலைக்களத்தில் இருவருக்கும் பேச வாய்ப்பளித்தான் அமைச்சன். அப்பொழுது உதாரன் வீரவுரை ஆற்றினான். "அரசன் தன் மகளுக்குக் கவிபாடக் கற்றுக் கொடுக்கச் சொன்னதற்கும், அமுதவல்லி என்மேல் காதல் கொண்டதற்கும் தமிழ்தானே காரணம். அமுதம் போன்ற தமிழ் என் உயிர் போவதற்குக் காரணம் தமிழ் என்று சமுதாயம் நினைத்திடுமோ? அப்படி ஒரு பழி தமிழுக்குண்டானால் தமிழினம் தாங்கிக் கொள்ளுமா? உங்களிடம் ஒன்று வேண்டுகிறேன். உயர் தமிழை உங்கள் உயிருக்கு மேலாகப் போற்றுங்கள். நான் விடைபெறுகிறேன்" என்று உதாரன் கூறினான்.

34. **குறிப்பறிதல் குறள் வழி விளக்கம் :**

(i) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். **குறள் –703**

**விளக்கம் :** முகக் குறிப்பினாலேயே பிறர் மனக்குறிப்பை அறியும் ஆற்றல் பெற்றவரை, அவர் விரும்பும் எதை வேண்டுமாயினும் கொடுத்து, அவரைத் தமக்குத் துணையாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(ii) பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். **குறள் –709**

**விளக்கம் :** கண்ணின் குறிப்புகளை உணர வல்லவற்குப், பிறருடைய பகைமையையும் நட்பையும் அவரது கண்ணே அறிவித்துவிடும்.

**பிரிவு - 2**

35. **மாடித்தோட்டம் – நடைமுறைக்குச் சாத்தியமே:**

(i) செயற்கை முறை விவசாயத்தால் உற்பத்தியாகும் காய்கறிகளை உண்பதால் நாம் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றோம்.

(ii) பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப காய்கறிகள் தேவை அதிகரிப்பின் காரணமாக குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் பெற வேண்டி பல்வேறு இரசாயன மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது.

(iii) இயற்கை முறையில் விளைப் பொருள்களை நம் வீட்டு மாடியில் தோட்டம் அமைத்து விளைவிக்கலாம்.

(iv) நன்றாக சூரிய ஒளி படும் இடத்தில் தொட்டிகளில் நல்ல வளமான மாட்டு சாணமும், மக்கிய தேங்காய் நார் கழிவுகளும் சமையறை கழிவுகளும் இட்டு நிரப்ப வேண்டும்.

(v) மாடித் தோட்டத்தில் வெண்டை, மிளகாய், கத்தரிக்காய், தக்காளி, அவரை, பூசணி, சுரைக்காய், புதினா, தண்டுக்கீரை, சிறுகீரை போன்றவற்றை வளர்க்கலாம்.

(vi) இயற்கையான முறையில் பராமரித்து இவற்றை வளர்த்து தத்தம் வீட்டு உறுப்பினர்கள் காய்கறி தேவையை பூர்த்தி செய்து கொண்டு நோயின்றி வாழலாம்.

(vii) இதற்காக அரசும் மாடித்தோட்டம் அமைக்க தேவையான உபகரணங்கள் சலுகை விலையில் வழங்கி வருகிறது.

36.

| இலக்கியங்கள் | செய்திகள் |
|---|---|
| புறநானூறு | 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' |
| நான்மணிக்கடிகை | இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் |

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/sura_guides www.Padasalai.Net https://bit.ly/3zsipUm0 www.CBSEtips.in



| இலக்கியங்கள் | செய்திகள் |
|---|---|
| ஆத்தி சூடி | இளமையில் கல் |
| திருக்குறள் | கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற யவை |
| நாலடியார் | கல்வி அழகே அழகு |
| திருமந்திரம் | துணையாய் வருவது தூய நற்கல்வி |

37. (i) ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில், ஒரு நிகழ்வு எந்த ஆண்டு, எந்தத் திங்கள், எந்தக் கிழமை, எந்நேரம், எவ்விடத்தில் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ii) பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746இல் கைப்பற்றியதையும், அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

(iii) தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படை யெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள்.

(iv) தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

38. **தாமஸிகம் :**

(i) நமது நாட்டில் மரங்களில் மலரும் பூக்கள் பல உள்ளன. மனிதன் அவை அனைத்தையும் மனத்தினுள் ஏற்றுக் கொள்ளவில்லை.

(ii) நாகரிக வழக்கத்தில் காலத்திற்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் மக்களுக்கு நிறைய தொடர்பு உண்டு.

(iii) பெரும்பாலும் இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு தோட்டக்காரனுடைய கைகளில் இருக்கும். மலர்ச் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை இதைத்தான் தாமஸிகம் அதாவது 'மெடீரியலிஸம்' என்கிறோம்.

**பிரிவு - 3**

39.

அ) **அணிச்சுட்டல் :** இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி பிறிதுமொழிதல் அணியாகும்.

**அணி இலக்கணம் :** புலவர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் உவமையை மட்டும் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல்.

**இப்பாடலின் பொருள் :** களைய வேண்டிய முள்மரம், முற்றிக் காழ்ப்பேறிவிட்டால், அதுகளைபவர் கையை வருத்தும். ஆகையால் அது இளஞ்செடியாக இருக்கும் பொழுதே கிள்ளி எறிக. பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும்.

**அணி விளக்கம் :** இக்குறட்பாவில் வள்ளுவர் களைய வேண்டிய முள்மரம், முற்றிக் காழ்ப்பேறிவிட்டால், அது களைபவர் கையை வருத்தும் என உவமையை மட்டும் கூறி அதன்மூலம் பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும் எனத் தாம் சொல்லக் கருதியதைக் குறிப்பாகப் பெற வைப்பதால் இக்குறட்பா பிறிது மொழிதல் அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் முள் மரம் சிறியதாக இருக்கும்போதே வெட்டி அழித்துவிட வேண்டும் என்ற உவமையைக் கூறி, பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வெற்றி கொள்ள வேண்டும் என்ற பொருளைப் பெற வைப்பதால் இது பிறிதுமொழிதல் அணியாகும்.

**அல்லது**

ஆ) **அணி விளக்கம் :** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் பலமுறை வந்து அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**சான்று :** வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**சான்று விளக்கம் :** செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணை வலிமையையும் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும்..

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் 'வலிமை' என்ற ஒரே பொருளைக் குறிப்பதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

40. **திரண்ட கருத்து :** இந்திய மக்களுக்குச் சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும் மனத்திற்கு இன்பம் தரும் உணர்ச்சி வேறு ஏதேனும் உண்டா? சொல்லினால் உண்டாகும் பெருமையும் பணத்தால் வரும் மயக்கத்தையும் சுகத்தையும் பார்த்தால் அது கீழான செயல் அல்லவா? மற்றவர்களை மகிழ்விக்கச் செய்யும் அறங்களும் புகழுடன் வாழும் வாழ்க்கை எல்லாம் சுதந்திர நாட்டிற்குக் கிடைத்தால் மட்டும்தான். ஒவ்வொரு நொடியும் நமக்கு வரும் துயரங்களை களைய அவை நாம் நின்று எதிர்த்திட நமக்கு நிச்சயம் சுதந்திரம் வேண்டும்.

**மோனைத் தொடை :** <u>இ</u>தம்தரும் - <u>இ</u>சையுடன்; <u>ப</u>தம்தரும் - <u>ப</u>ணம்தரும் ; <u>நி</u>தம்தரும் - <u>நி</u>மிர்ந்து; <u>சு</u>தந்திரம் - <u>ப</u>தம்தரும்; <u>சு</u>கம்தரும் - <u>பா</u>ர்த்தால் ; <u>நி</u>தம்தரும் - <u>நி</u>ச்சயம்

**எதுகைத் தொடை :** சு<u>த</u>ந்திரம் - இ<u>த</u>ம்தரும்; ப<u>த</u>ம்தரும் - நி<u>த</u>ம்தரும்

**இயைபு நயம் :** காட்டி<u>லும்</u> வேறுண்டோ? போகமு<u>ம்</u> கீழன்றோ? வாழ்தலு<u>ம்</u> வேண்டு<u>ம்</u>

**அணிநயம் :** இப்பாடலில் இயல்பு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

41. தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி தொடங்குவதற்கு முன் நாம் பின்வரும் விதிமுறைகள் சிலவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும்.

(ii) பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.

(iii) வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.

(iv) சொல்லோசை நயமாக இருத்தல் வேண்டும்.

(v) தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக் கூடாது.

42. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்பவையாகும். அதில் பொருள் இலக்கணம் இரு வகைப்படும்.
அவை, அகப்பொருள், புறப்பொருள். அகப் பொருள் மூன்று வகைப்படும். அவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். அவற்றுள் நிலம் ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. பொழுதுகள் சிறுபொழுது, பெரும்பொழுது என இரு வகைப்படும்.

43. 1) கோழைகளால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. மன்னித்தல் என்பது வலிமைமிக்கவர்களின் பண்பாகும்.

2) கத்தி முனையைவிட பேனாமுனை கூர்மையானது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/padasalaiguides www.Padasalai.Net https://bit.ly/3zspUm0 www.CBSEtips.in



3) என் அனுமதியில்லாமல் என்னை யாரும் புண்படுத்த முடியாது.

4) கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த ஆயுதம். அதனைக் கொண்டு உலகை மாற்ற பயன்படுத்தலாம்

**பகுதி - IV**

44.

அ) **முன்னுரை:** திருக்குறளில் அறத்துப்பாலில் அமைந்த இருபத்து இரண்டாவது அதிகாரம் **'ஒப்புரவறிதல்'** ஆகும். ஒப்புரவு அறிதல் என்பது உலக ஒழுக்கத்தை அறிந்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்வதாகும். இங்கு கொடையில் சிறந்து விளங்க வள்ளுவர் கூறும் வழிகளை இவ்வதிகாரத்தின் வழிக் காண்போம்.

**முயன்று ஈட்டிய பொருள் :** முயற்சி கொண்டு பொருள் ஈட்ட வேண்டும். அவ்வாறு ஈட்டிய பொருள், அடிப்படைத் தேவைகளையும் தங்களால் ஈடு செய்து கொள்ள இயலாதவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதைப் பொருள் பெற்றவர் உணர வேண்டும்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

**உயிர் வாழ்வான்:** ஒப்புரவை அறிந்து பிறருக்கு உதவியாகத் தன் வாழ்வை அமைத்துக் கொள்பவனே உயிர்வாழ்பவன் எனக் கருதப்படுவான். அப்படி இல்லாமல் அதற்கு மாறானவன் இறந்தவனாகவே கருதப்படுவான்.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

**நல்லவர் செல்வம்:** பெருமைக்குரிய ஒருவனிடம் உள்ள செல்வமானது, தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகப் பயன்படும் மருந்து (மூலிகை) மரத்தைப் போன்றது.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**முடிவுரை:** உலகப் பொதுமறை என அழைக்கப்படுவது திருக்குறள். இதில் ஒப்புரவறிதல் அதிகாரத்தின் வழி, ஒருவன் கொடையில் சிறந்து விளங்க திருக்குறள் கூறும் வழி சிறந்ததாக அமைந்துள்ளது.

**அல்லது**

ஆ) **முன்னுரை:** மனோன்மணீயம் தமிழில் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற நூலைத் தழுவி 1891-இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதினார். இயற்கையில் ஈடுபாடு கொண்டு, தேனில் தோய்ந்து இணையில்லாத ஊக்கமும் அமையப் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதை விளக்குவதாக உள்ளது இந்நூல். இதில் நடராசன் என்ற கதைப்பாத்திரத்தின் தனி மொழிகளிலிருந்து புலப்படும் கருத்துக்களைக் காண்போம்.

**இலக்கு:** மனிதன் சோம்பி இருப்பதற்கும், வளர்ச்சி குறைந்ததற்கும் காரணம் அவனுக்குள் இலக்கு இல்லாமல் இருப்பதே ஆகும். எந்த ஒரு செயலாக இருந்தாலும் அதை செய்வார்க்கு ஓர் இலக்கு வேண்டும். அந்த இலக்கை அடைகிறபோது அவனுக்கு அது ஆனந்தத்தைக் கொடுப்பதாக இருக்க வேண்டும் உயிரின் தூண்டுகோலாக இருப்பது இலக்கே ஆகும்.

**புல்லின் பரிவு:** சிறு புல் கூட தனக்கென்று ஓர் இலக்கை வைத்திருக்கிறது. பூங்கொத்தை உயர்த்தி தேனை உணவாக அளித்து, தன் மலர்களைக் காயாக்குவதற்கும், தன் இனத்தை வாழச் செய்வதற்கும் மகரந்தத்தை பரப்புகிறது. தன் குழந்தை வாழவைக்க வேரிடம் அனுப்புகிறது. இப்படிப்பட்ட பொறுமை, முயற்சி, பரிவு, புல்லிடம் காணப்படுகிறது. இவை மனிதனிடமும் காணப்பட வேண்டும். ஆகவே எந்த ஒன்றையும் தாழ்வாக நினையாமல் இருக்க வேண்டும். அப்படி இருப்பவரிடத்து இன்பம் தங்கும்.

**வாய்க்காலின் விசித்திரம்:** உணவு கொடுக்கும் வயலுக்குள் பாய்கிறது. உணவை விளைவிக்கிறது. மலையை கடலாகவும், கடலை மலையாகவும் மாற்றுகிறது. அனைத்தையும் கொண்டு சென்று கடலுள் கலக்கிறது. பல்வேறு இடங்களைக் கடந்து பலவற்றைத் திரட்டுகிறது. இரவுப் பகல் பார்க்காமல் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கிறது? இப்படி உழைப்பவர் யார்? எனவே வாய்க்காலைப்போல அன்பும், ஊக்கமும், உறுதியும் இருக்குமானால் எல்லோரும் பெருமையை அடையலாம்.

**மண்புழுவின் பொதுநலம்:** உழவின் நண்பனாக விளங்கும் மண்புழு, எந்த மண்ணையும் நல்ல மண்ணாக்குகிறது. பிறர் தரும் தொல்லைகளைப் பொறுத்துக்கொண்டு அவருக்கும் நன்மையைச் செய்கிறது. இப்படி மண்புழுவிடம் காணப்படும் ஒழுக்கம், இணையில்லா அன்பு, பொறுமை மனிதர்களிடமும் வேண்டும்.

**முடிவுரை:** புல், புழு, வாய்க்கால் இவைகளிடம் காணப்பட்ட பொறுமை, முயற்சி, பரிவு, அன்பு, உழைப்பு, ஊக்கம், உறுதி, ஒழுக்கம் இவை அனைத்தும் மனிதனிடம் காணப்பட வேண்டும் என்பதே நடராசனின் தனிமொழிகளிலிருந்து அறியும் கருத்துகளாகும்.

45.

அ) **முன்னுரை :** கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதாகும். பன்னெடுங்காலமாக முன்னோர்களால் வளப்படுத்தப்பட்ட அறிவாற்றலையும் அனுபவத்தையும் ஒவ்வொருவரும் பெறச் செய்வதே நோக்கமாகும். அந்த வகையில் பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களைப் பார்ப்போம்.

**சமண, பௌத்தக் கல்வி முறைகள் :** கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையான அறங்களாகும். திகம்பர துறவிகள் தங்கும் இடங்களிலேயே கல்வியை மாணவர்களுக்கு போதித்தனர். பள்ளி என்ற சொல் சமண பௌத்த சமயங்களின் கொடை யாகும். வேடல் என்ற ஊரில் சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார். பெண்களுக்கு தனியாக 'பெண் பள்ளிகள்' உருவாயின. பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது.

'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்'

மணிமேகலையில் சுட்டப்படுகின்றது என்ற செய்தி பௌத்தமும் சமணரும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுச் செய்த பெரும் பங்கினை விளக்குகிறது. சீனப்பயணி யுவாங்சுவாங் காஞ்சிபுரத்தில் உள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியிருக்கிறார்.

**மரபுவழிக் கல்வி முறைகள் : குருகுலக்கல்வி முறை:** மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் தங்கி, கல்வி கற்றனர். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது.

**திண்ணைப் பள்ளிக் கல்வி முறை :** அக்காலக் கல்வி முறை திண்ணைப் பள்ளி என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிராமங்கள் தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன. அவைத் 'தெற்றிப் பள்ளிகள்' என்றும் அழைத்தனர். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் 'கணக்காயர்கள்' என்றே அழைக்கப்பட்டனர்.

enquiry@surabooks.com Kindly send me your study materials To padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/sarasalaiguides www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**உயர்நிலைக்கல்வி :** தனி நிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமைக்குள் இக்கல்விமுறை விளங்கும்.

**தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் :** சமண, பௌத்தக் கல்வி முறைகளில் மாணவர்கள் ஆசிரியர்கள் இருக்கும் இடம் சென்று கல்வி கற்றனர். அதன்பின் குருகுலக் கல்வி முறை தோன்றியது. மரபுவழிக் கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு திண்ணைப்பள்ளியில், பாடசாலைகள், மக்காபுகள், மதரஸாக்கள் என்று நாட்டுக்கல்வி அமைப்புகள் உருவாயின. இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன. ஆயினும் பொதுமக்களுடைய கல்வித் தேவையை இப்பள்ளிகள் ஓரளவேனும் பூர்த்தி செய்தன. சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் தாமஸ் மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கல்விக்குழு பரிந்துரைகள் :** நாடு விடுதலை பெற்றவுடன் நம் அரசு அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி வழங்க வலியுறுத்தி ஐந்தாண்டு திட்டங்களில் கீழ் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் விளைவாக தமிழகத்தில் கல்வி சீராக வளரத் தொடங்கியது. கல்விக் குழுக்களின் பரிந்துரைகள் கல்வி வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தன.

**முடிவுரை :** குருகுலக் கல்வி, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. சமண, பௌத்தக் கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகத்தில் கல்வி முறை முன்னேற்றம் அடைந்துள்ளது.

**அல்லது**

ஆ) **முன்னுரை:** மனித மனத்தில் அழகுணர்ச்சியை ஏற்படுத்துபவை கலைகள். அவை மனிதனின் படைப்புத் திறனால் உருவானது. கலைகள், சிற்பம், கட்டடம், ஆடல், பாடல் எனக் கலைகள் பல வகைப்படும். அவற்றுள் நமக்கு வியப்பை ஏற்படுத்துவது தஞ்சைப் பெரியக் கோவிலின் கட்டடக் கலையே.

**கல்லும் கதை சொல்லும் :**

(i) பதினோறாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு வரைக் கட்டினான். 2010இல் இக்கோவிலின் 1000ம் ஆவது ஆண்டு நிறைவடைந்தது.

(ii) பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேர நாட்டை வெற்றி கொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்கு "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

(iii) பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும். இராசராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று கட்டி முடிக்கப்பட்டது. 'தட்சிணமேரு' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

(iv) இந்தியக் கட்டடக் கலைப் பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

(v) இராசராசன், அவருடைய தமக்கை அவருடைய மனைவியர் ஆகியவர்கள் கொடுத்த கொடை மட்டுமின்றி மற்றவர்களும் கொடை அளித்துள்ளனர் என்று கோவிலினுள் உள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

(vi) தஞ்சைக் கோவிலில் நந்தியும் சிகரமும் ஒற்றைக் கல்லால் ஆனது. இங்குள்ள நந்தி, சோழர் காலத்தைச் சார்ந்தது அன்று. இங்கு உள்ள பெரிய நந்தியும் மண்டபமும் நாயக்கர் காலத்தது. சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது.

(vii) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக்கிறார்கள். 'எருதந் குஞ்சிர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றி இக்கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

(viii) முதலாம் இராசாதிராசன் காலத்தில் பெண் அதிகாரியாக சோமயன் அமிர்தவல்லி என்பவரும் இருந்துள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர். கோயிலை கட்டிய தச்சர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

**பயன்கள்:** கோவில் என்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமன்று. அங்கே இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்கப்பட்டன. அது மக்கள், ஒன்றுகூடும் இடமாகவும் இருந்தது. எனவே, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் அனைத்துமே அங்கே கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப்பட்டிருந்தன. கருவூலமாகவும் மருத்துவமனையாகவும் போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கக்கூடிய இடமாகவும் கோவில்கள் பயன்பட்டன.

**முடிவுரை:** பல நூறு ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாக நிற்கும் தஞ்சைப் பெரியக் கோவில் தமிழர்களின் மிகச் சிறந்த கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது. 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்தும் என்பதனை மேற்கண்ட சான்றுகள் வாயிலாக நாம் அறிந்து கொண்டோம்.

46.

அ) **முன்னுரை:** பழங்கால வீரவிளையாட்டான ஏறுதழுவுதலின் போது அதில் கலந்து கொள்ளும் காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும் இடம்தான் வாடிவாசல். அக்காளைகளின் மூக்கணாங்கயிறு மற்றும் காளையை இணைக்கும் கயிறு இவற்றையெல்லாம் அகற்றிவிட்ட பிறகுதான் போட்டிக்கு விடுவர். 'வாடிவாசல்' என்ற பெயரில் சி.சு. செல்லப்பா அவர்கள் எழுதியுள்ள நாவலைப் பற்றிக் காண்போம்.

**ஏறுதழுவுதலின் விதிமுறைகள்:** இவ்விளையாட்டு மனிதர்களுக்கும் காளைக்கும் உள்ள நட்புறவைக் காட்டும். இதில் கலந்து கொள்ளும் காளைகளுக்கு எவ்விதத் துன்பத்தையும் கொடுக்கக்கூடாது. மனிதர்களுக்கு இரத்தம் வரலாம். ஆனால் காளைகளுக்கு ஒரு சொட்டு இரத்தம்கூட வரக்கூடாது.

**கதைச் சுருக்கம்:** வாடிவாசலில் ஜமீன்தாரின் காளையான காரிக்கொம்பு(வாடிபுரம் காளை/கருப்புப் பிசாசு) வெளியே வந்தது. அங்கிருந்த அனைவரின் குரல்களிலும் ஒரு நடுக்கம். அக்காளை பரமசாதுவாக ஆடி அசைந்து வந்தது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/sura_guides www.Padasalai.Net https://bit.ly/3ssipUm0 www.CBSEtips.in



மருதன், பிச்சி இருவரும் ஒருவருக்கொருவர் சைகை காட்டிக் கொண்டு காளையை அடக்க முயன்றனர். சிறிது நேரப் போராட்டத்திற்குள் பிச்சி காளையை அடக்கிவிட்டான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. காரணம் ஜமீன்தாரின் காரிக் கொம்பு காளையினால் பிச்சியின் தந்தை இறந்துவிட்டார். தந்தை இறப்பிற்குக் காரணமான காரியை அடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த அவன் அக்காளையை அடக்கி பரிசுப் பொருளைப் பெற்றான்.

**ஏறுதழுவுதலின் போது நிகழும் வர்ணனைகள்:**

“கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்.”

“பய செத்தான்.”

“குருத்துப் பையன் அநியாயமா....!”

“பட்டு உருமாவுக்கு ஆசைப்பட்டு உசிரை இந்தான்னு கொடுக்கிறான் பாவி!” (பட்டு உருமா - பட்டுத் துணியில் காளையின் கொம்பில் கட்டப்பட்ட துணி)

“ரெண்டு பவுனுத் தங்கம் கண்ணுல உறுத்துமுல்லே!”

“ராஜாளி மாதிரி வந்து நிக்குது பாரு.”

“இதையா கிழக்கத்தியான் பிடிக்கப் போறான்.”

“அட! விராலு மாதிரித் துள்ளுதுடா!”

இந்த வர்ணனைகள் நம்மை ஜல்லிக்கட்டு நடக்கும் வாடிவாசலுக்கே அழைத்துச் செல்கிறது. அது மட்டுமின்றி இச்சிறுகதையில் வட்டார மொழிகளை அறிய முடிகிறது.

**காளையை அடக்குவதில் நேர்மை :** மருதனும் பிச்சியும் கொம்பின் பக்கம் ஒருவரும். வால் பக்கம் ஒருவருமாக நின்று காளையை அடக்க முயன்றனர். காளை மருதன் கைபட்டவுடன் சடக்கென திரும்பியது. அந்த நேரத்தில் பிச்சி காளையின் திமிலைப் பிடித்து அடக்க முயன்றான். காளை கொஞ்சம் பின் வாங்கியது. மீண்டும் மீண்டும் அதன் திமிலை மட்டும் பிடித்து அடக்கினான். பிச்சி காளையின் நெற்றித் திட்டில் கைபோட்டு, கொம்புக்குக் கொம்பு மாறி கட்டியிருந்த மெடல், அலங்காரச் சிறு தங்க நகைகள் கோர்த்திருந்த சங்கிலியுடன் கூடிய பட்டுத் துணியை எடுத்தான்.

**முடிவுரை:** ஜல்லிக்கட்டு என்பது மனிதனுக்கும் காளைக்கும் நடைபெறும் ஒரு உன்னதமான விளையாட்டு. இரண்டு காளைகளின் இடையே நடை பெறும் மகிழ்ச்சியான உத்வேகத்தை அளிக்கக்கூடிய ஒரு விளையாட்டு. இது ‘தமிழர் பண்பாடுகளில் ஓர் அடையாளமாக விளங்குகிறது’ என்பதில் ஐயமில்லை.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி கொண்டு நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்றவர் நர்த்தகி நடராஜ். தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். அவரின் நேர்காணல்வழி அறிந்த செய்திகளைக் காண்போம்..

**இளமைப் பருவம் :** நர்த்தகி நடராஜ் மதுரையில் உள்ள அனுப்பானடியைச் சேர்ந்தவர். அவருடைய தோழியின் பெயர் சக்தி. அவருடைய முன்னேற்றத்திற்குச் சக்தியே துணை புரிந்துள்ளார். வைஜெயந்தி மாலாவின் குருவான தஞ்சை கிட்டப்பாவிடம் பரதம் கற்றார். கிட்டப்பா அவரைத் தம் மகளாகவே பார்த்துக் கொண்டார். அவரே **‘நர்த்தகி’** என்று பெயர் சூட்டினார்.

**பெண்மையை உணர்தல் :** பரதம் கற்றபோது பெண்மையை உணர்ந்தார். பெண்மையை வெளிப்படுத்தும் நொடி நதியலையில் விழுந்த இலைபோல, காற்றில் பறக்கும் இறகு போல மனம் அதன் போக்கில் செல்லும். அந்த விநாடி உலகையே மறப்பேன் என்று கூறுகிறார். திரைப்படங்களில் வரும் நடனம் ஈர்த்ததாகக் கூறுகிறார்.

**விழிப்புணர்வு :** சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கிய காலம் வரை ஆழ்ந்துப் படித்துள்ளார். திருநங்கையர் எல்லாக் காலக் கட்டத்திலும் இருந்துள்ளனர். தொல்காப்பியத்தில் அதற்கான சான்று உள்ளது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள 11 வகையான ஆடற்கலைகளில் ‘வேளிர் ஆடல்’ முக்கியமானது. சங்க இலக்கியம் முதல் தற்போதைய நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயற்சி செய்கிறார். இதுவும் திருநங்கையர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த ஒரு வகை விழிப்புணர்வுதான்.

**நுட்பமான முத்திரைகள் :** ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்தில் திருவாசகம், தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தியுள்ளார். அங்கு ஜப்பானியர்கள் மட்டும்தான் இருந்தனர். திருவாசகம் தேவாரம் தெரியாத அவர்கள் பரதத்தின் நுட்பமான முத்திரைகளை உள்வாங்கியதால் கண் கலங்கினர்.

**இழந்த பண்பாட்டை மீட்டல் :** பண்பாட்டு வேர்களை நாம் புறக்கணிக்கக்கூடாது. ஐரோப்பியப் பண்பாட்டில் ஊறிய நார்வேயில் நிகழ்ச்சி நடத்தும்போது திருக்குறளை மையமாக வைத்தே மாணவிகளுக்குப் பயிற்சிக் கொடுத்துள்ளார். அங்குள்ளோர் அந்த வினாடியில் இருந்து திருக்குறளை ஆர்வமாகப் படித்துள்ளனர். கலையின் வழியாகப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும் என்று கூறுகிறார்.

**வழக்கறிஞராவதுதான் இலட்சியம் :** இவர் தமிழ்வழிக் கல்வி பயின்றவர். வழக்கறிஞர் ஆவதை முழுமுதல் லட்சியமாகக் கொண்டிருந்தவர். இவர் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறார். தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரத்தை நடனம் மூலம் பரப்பியுள்ளார். இவ்விலக்கியங்களைப் பற்றித் தொடர்ந்து ஆய்வு செய்கிறார்.

**சோதனைகளைச் சமாளித்தல் :** மற்ற மானுடரைவிட எல்லாச் சோதனைகளையும் இரண்டு மடங்கு அனுபவித்துள்ளார். அதற்கு அவர் கொடுத்த விலை வலிதான். அகிலனின் ‘தாமரை நெஞ்சம்’ கதைநாயகி துக்கம் வரும்போது தண்ணீர் குடிப்பாள். அதைப் போல் இவர் நடனம் ஆடித் தம் துயரைப் போக்கிக் கொள்வார்.

**நெகிழ வைக்கும் தருணம் :** நர்த்தகி நடராஜ் நடத்தும் வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம் வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கியுள்ளார். இவர் அம்மாவால் புறக்கணிக்கப்பட்டவர். தன் மாணவிகள் ‘அம்மா’ என்று அழைக்கும்போது அவருடைய மனம் நெகிழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

**முடிவுரை:** நர்த்தகி தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, இலண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை அழகாக்கி வருகிறார். திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். திருநங்கைகளுள் முதன் முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் எனப் பல்வேறு சாதனைகளைச் செய்தவர்.

47.

அ) ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை. **– சு.வில்வரத்தினம்**

ஆ) தோன்றின் புகழொடு தோன்றுக அ∴திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000